CNR.No.TNDG07001792-2019

**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி, திண்டுக்கல் மாவட்டம்**

**முன்னிலை : B.ராஜா, பி.ஏ., பி.எல்.,**

**கூடுதல் சார்பு நீதிபதி, பழனி.**

**2026-ம் ஆண்டு ஜுலை மாதம் 30-ம் நாள் வியாழக்கிழமை**

**(2058 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ பராபவ வருடம் ஆடித்திங்கள் 14-ம் நாள்)**

**அசல் வழக்கு எண்.239/2010**

1. G.வைரமுத்து,
   க/பெ.N.கணேசன்
2. D.விஜயலெட்சுமி,
   த/பெ.தண்டபாணி
3. D.சோலகிரி,
   த/பெ.R.தண்டபாணி ... வாதிகள்

/ எதிர் /

1. R.தண்டபாணி (இறப்பு)
   த/பெ.ரெங்கசாமி
2. R.குப்புராஜ், (இறப்பு)
   த/பெ.ரெங்கசாமி
3. V.மாசிலாமணி,
   க/பெ.வெள்ளைச்சாமி கவுண்டர்,
4. முனியசாமி,
   த/பெ.லேட்.குப்புராஜ்
5. நாட்ராயன்,
   த/பெ.லேட்.குப்புராஜ்
6. கலைச்செல்வி,
   த/பெ.லேட்.குப்புராஜ் .... பிரதிவாதிகள்

(இ.ம.எண்.1/2023-ல் கடந்த 01.12.2023-ஆம் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவின்படி 4 முதல் 6 பிரதிவாதிகள் கட்சி சேர்க்கப்பட்டுள்ளனர்)

அசல் வழக்கானது இறுதியாக, கடந்த 06.07.2026-ம் தேதி, இந்நீதிமன்றத்தில்

இறுதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் **திரு.B.சரவணக்குமார்** அவர்கள் ஆஜராகியும், 1, 2 பிரதிவாதிகள் இறந்துவிட்ட நிலையில், 3-ஆம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு.M.சிவசாமி** அவர்கள் ஆஜராகியும், 4, 5, 6 பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகவில்லை என்பதால், தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டு, ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்குக் கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் கவனமாகப் பரிசீலனை செய்து, இருதரப்பு வாதங்களையும் கேட்டு, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பு</u>**

01) கடந்த 29.05.1987-ஆம் தேதியிட்ட உயிலின்படி வாதிகளின் பாக நிலத்தைப் பிரித்து, வாதிகளுக்கு பாத்தியப்பட்ட 1/3 பாகத்தை தனித்த சுவாதீனம் ஒப்படைக்க வழக்கறிஞர் ஆணையரை நியமித்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும், பிரதிவாதிகளோ அவர்களுடைய ஆட்களோ வாதிகளின் பாக நிலத்தில் வாதிகளுக்குள்ள அனுபோக பாத்தியதையில் எந்தவித இடையூறோ, குறுக்கீடோ, வில்லங்க மாற்றமோ செய்யாமல் இருக்க நிரந்தர உறுத்துக் கட்டளை பிறப்பிக்கக் கோரியும், செலவுத் தொகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>02) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள திருத்தியமைக்கப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்</u>:**

வழக்கு சொத்தானது கடந்த 1975-ம் ஆண்டு வாதிகளின் தகப்பன் வழி தாத்தவான K.ரெங்கசாமி என்பவரால் வாங்கப்பட்டது. மேற்படி ரெங்கசாமிபிள்ளைக்கு தண்டபாணி, குப்புராஜ் என்ற இரண்டு மகன்கள். அதில் தண்டபாணி என்பவர் வாதிகளின் தந்தை, வழக்கின் 1-ம் பிரதிவாதி. வாதிகளின் சித்தப்பாவான குப்புராஜ் என்பவர் வழக்கின் 2-ம் பிரதிவாதி. வழக்கு சொத்தானது K.ரெங்கசாமிபிள்ளை மூலம் சுய சம்பாத்தியத்தில் வாங்கப்பட்டாலும், கூட்டுக் குடும்ப

நன்மை கருதி அவரது பெயரிலும் அவரது இரண்டு மகன்களான தண்டபாணி மற்றும் குப்புராஜ் பெயரிலும் கடந்த 21.09.1975-ல் கிரையம் பெறப்பட்டுள்ளது.

வாதிகளின் தாத்தா மேற்படி கிரைய சொத்தில் செங்கல் சூளை வைத்து நடத்தி வந்தார். அவருக்கு துணையாக அவரது மகன்களான 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் உதவியாக இருந்து செங்கல் தயாரிப்பு மற்றும் விற்பனையை செய்து வந்தனர். இந்நிலையில், வாதிகளின் தாத்தாவிற்கும் அவரது மகன்களுக்கும் தனிதனியாக தொழில் நடத்த வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதனால் குடும்பத்திற்குள் தேவையில்லாத பிரிவை தவிர்க்கவும், மகன்களுடைய எதிர்கால வாழ்க்கையை காப்பாற்றும் பொருட்டும் அவர்களுக்குள்ளாக மேற்படி கிரையச் சொத்தைப் பொறுத்து ஒத்துக் கொள்ளத்தக்க பஞ்சாயத்து பாகபிரிவினையை கடந்த 29.09.1986 -ஆம் தேதி ஏற்படுத்திக் கொண்டார்கள். இந்தப் பாகப்பிரிவினை இருதரப்பாலும் ஒத்துக் கொள்ளப்பட்ட எழுதப்பட்ட ஆவணமாகும்.

இதன்படி தாவா சொத்தானது வாதிகளின் தாத்தா K.ரெங்கசாமிபிள்ளை என்பவரின் அனுபவ பாத்தியத்தில் இருந்து வந்தது. மேற்படி வாதிகளின் தாத்தா K.ரெங்கசாமிபிள்ளை தாவா சொத்தை 1975-ல் வாங்கும் போது அதன் விஸ்தீரணம் 4 ஏக்கர் 23 சென்டாகும். பாகப்பிரிவினைக்குப்பின் வழக்கு சொத்தானது 2 ஏக்கர் 23 சென்ட் வாதிகளின் தாத்தாவுக்கு பாத்தியமானது ஆகும். மீதமுள்ள 2 ஏக்கர் 1, 2 பிரதிவாதிகளுக்கு விடப்பட்டுள்ளது. அதன்பின்னர் மேற்படி மூவரும் தனித்தனியே செங்கல் சூளை தொழிலை செய்து வந்தனர்.

இந்நிலையில், கடந்த 1987-ம் வருடம் வாதிகளின் தாத்தா தொடர்ச்சியாக அடிக்கடி நோய் வாய்பட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு தன்னால் நீண்டநாள் வாழமுடியாது என்று தோன்றியதால் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து கடந்த 29.05.1987 அன்று ஒரு உயில் சாசனத்தை வாதிகளுக்கு ஆதரவாக எழுதி வைத்து விட்டு கடந்த 10.12.1987 அன்று இறந்துவிட்டார்.

மேற்படி உயில் சாசனப்படி தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டு

அவர்களது அனுபவத்தில் இருந்து வந்தது. இருப்பினும் தந்தை என்ற முறையில் 1 மற்றும் 2-ம் பிரதிவாதிகள், வாதிகளின் பாக நிலத்தை செங்கல் தயாரிப்புக்கு பயன்படுத்தி வந்தார்கள். பாகப்பிரிவினை நடந்த காலத்தில் வாதிகள் மைனர்களாக இருந்த காரணத்தினால், பாகபிரிவினை நடந்தது பற்றியோ, உயில்சாசனம் எழுதியது பற்றியோ தெரிவிக்கப்படவில்லை. கூட்டுக் குடும்ப நன்மை கருதி 1 மற்றும் 2 பிரதிவாதிகள், வாதிகள் நிலத்தை தங்கள் தொழிலுக்கு பயன்படுத்தி வந்தனர். இந்நிலையில் இவ்வழக்கின் 3-ம் பிரதிவாதியானவர், 1-ம் மற்றும் 2-ம் பிரதிவாதிகளுடன் தொழிலில் கூட்டாளியாக சேர்ந்தார்.

பிரதிவாதிகள் கூட்டாக சேர்ந்து தொழில் நடத்தி கொண்டிருந்த வேளையில், 3-ம் பிரதிவாதி தொழிலில் மேலாதிக்கம் செலுத்தி வந்ததால், 2 ஆம் பிரதிவாதிக்கும் 3-ம் பிரதிவாதிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, 2-ஆம் பிரதிவாதி தொழிலை விட்டு விலகி சென்று விட்டார். அதன்பிறகு 1-ம் பிரதிவாதியும், 3-ம் பிரதிவாதியும் சேர்ந்து செங்கல் சூளைத் தொழிலை தாவா சொத்தில் நடத்தி வந்துள்ளனர்.

தற்போது 3-ம் பிரதிவாதி மட்டுமே வாதிகளின் பாகம் உள்பட மொத்த நிலத்தையும், அனுபவித்து வருகிறார். 1-ம் பிரதிவாதி தந்தையாக இருந்த போதிலும், 3-ம் பிரதிவாதி தரப்பின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறார். இதில் 3-ம் பிரதிவாதி, தனது கணவர் வேலுச்சாமி என்பவருக்கு பினாமியாக இருந்து வருகிறார். மேற்படி பிரச்சனை குறித்து வாதிகள், 3-ம் பிரதிவாதியிடம் கேட்டபோது, வழக்கு சொத்தை ஏற்கனவே கிரையம் செய்து கொண்டதாகவும், வாதிகளுக்கு தாவா சொத்தில் எந்தவிதமான உரிமைகளும் இல்லை என்றும் கூறியுள்ளார்.

இதனால் அதிர்ச்சியடைந்த வாதிகள், கடந்த 06.09.2008-ஆம் தேதி 1 மற்றும் 3-ம் பிரதிவாதிகளுக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினார்கள். அதை 1 மற்றும் 3-ஆம் பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டு 3-ம் பிரதிவாதி மட்டும், முரண்பட்ட வகையில் பதில் அனுப்பினார். கடந்த 2008-ம் வருடம் அக்டோபர் மாதம், 3-ம் பிரதிவாதி,

வாதிகளை அழைத்து ஒரு இலட்சம் பெற்றுக்கொண்டு, வெற்று பத்திரங்களில் கையெழுத்துப் போடும்படி வற்புறுத்தவே, வாதிகள் மறுத்துவிட்டார்கள்.

தற்போது 3-ம் பிரதிவாதி. வழக்கு சொத்து உட்பட சொத்துக்கள் முழுவதையும் 1993ம் ஆண்டு, 1-ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்றுவிட்டதாக அறிவித்துள்ளார். ஆனால் 1-ஆம் பிரதிவாதி 1995ம் வருடம் 3-ம் பிரதிவாதியின் மோசடியான கிரைய ஆவணத்தை ரத்து செய்து விட்டதாக தெரிவிக்கிறார். எவ்வாறாக இருப்பினும், உற்பத்தி செய்யப்பட்ட ஆவணமாக இருந்தாலும், வாதிகளது சம்மதம் இன்றி வழக்கு சொத்தை வாங்கியதோ, விற்றதோ செல்லாது. அது வாதிகளை கட்டுப்படுத்தாது.

கடந்த 29.05.1987-ம் தேதியிட்ட உயில் சாசனப்படி தாவா சொத்து வாதிகளுடையது. பிரதிவாதிக்கு எந்த உரிமையும் இல்லை. 1ம் பிரதிவாதியை பொறுத்தவரை வாதிகளுக்கு பாதுகாவலர் மட்டுமே. 1-ம் பிரதிவாதி எந்த வகையிலும் வழக்கு சொத்தை வில்லங்கப்படுத்த முடியாது. வாதிகளின் சம்மதம் இன்றி வழக்கு சொத்தின் எந்தவித பரிமாற்றமோ வில்லங்கமோ செல்லத்தக்கதல்ல.

எனவே, கடந்த 29.05.1987-ஆம் தேதியிட்ட உயில்படி வாதிகள் பாக நிலத்தைப் பிரித்து, அதில் வாதிகளுக்கு 1/3 பாகத்தை தனித்தனியாக பிரித்துக் கொடுக்கும்படியும், பிரதிவாதிகளோ அவருடைய ஆட்களோ வாதிகள் பாக நிலத்தில் வாதிகளுக்குள்ள அனுபோக பாத்யதையில் எந்தவித இடையூறோ, குறுக்கீடோ, வில்லங்கமோ, மாற்றமோ செய்யாமல் இருக்க வழக்கு சொத்தைப் பொறுத்து ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்கக் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>03) 1-ஆம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம் :</u>**

தாவா சங்கதிகள் பொய்யானவை, தவறானவை. 1-ஆம் பிரதிவாதி வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளைத் தவிர, மற்ற அனைத்து சங்கதிகளும் பொய் என மறுக்கப்படுகின்றன. அவற்றை வாதிகள் கண்டிப்பான

முறையில் நிரூபிக்க வேண்டும். வழக்குச் சொத்தானது, 1-ஆம் பிரதிவாதியின் தந்தையாரான ரெங்கசாமி பிள்ளையால் 1975-ஆம் ஆண்டில், அவரது பெயரிலும், 1, 2 பிரதிவாதிகளின் பெயரிலும் கூட்டாக வாங்கப்பட்டது. மேற்படி நிலத்தின் மொத்த பரப்பளவு 4 ஏக்கர் 23 சென்ட் ஆகும். 1986-ஆம் ஆண்டில் மேற்சொன்ன நிலம் தொடர்பாக ஏற்பட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தின்படி, 1, 2-வது பிரதிவாதிகளுக்கு தலா 1 ஏக்கர் ஒதுக்கப்பட்டது. மீதமுள்ள 2 ஏக்கர் 23 சென்ட் நிலத்தை 1, 2 பிரதிவாதிகளின் தந்தையார் வைத்துக்கொண்டார். இருப்பினும், அந்த நிலத்தில் தொழிலைக் கூட்டாகவே செய்து வந்தார்கள்.

ரெங்கசாமி பிள்ளை 1987-ஆம் ஆண்டில், 1-பிரதிவாதியின் குழந்தைகளுக்குச் சாதகமாக ஒரு உயில் எழுதி வைத்துவிட்டு காலமானார். எனவே, தந்தையாரின் நிலத்தை 1-ஆம் பிரதிவாதியே சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டு வழக்கம் போல் பயன்படுத்தி வந்தார்.

1990-ஆம் ஆண்டில் 3-வது பிரதிவாதி (இவர் தனது கணவர் வேலுச்சாமியின் பினாமி ஆவார்) பங்குதாரர்களில் ஒருவராக இத்தொழிலில் நுழைந்தார். 3-ஆம் பிரதிவாதியின் கணவர் ஒரு பொதுப்பணித்துறை (P.W.D) ஒப்பந்ததாரர் என்பதால், அவர் தனது சொந்த ஒப்பந்தப் பணிகளுக்காக செங்கல் சேம்பரைப் பயன்படுத்திக் கொண்டார். நிலத்தின் வாடகை மற்றும் விற்பனை தொடர்பான ஒப்பந்தங்கள் அனைத்தும் 3-வது பிரதிவாதியின் கணவருக்காக, 3-வது பிரதிவாதியின் பெயரிலேயே இருந்தன.

3-வது பிரதிவாதி படிப்படியாக தாவா சொத்து மற்றும் தொழிலின் மீது ஆதிக்கத்தை செலுத்தினார். மேலும், 1-ஆம் பிரதிவாதியின் அறியாமையையும் படிப்பறிவின்மையையும் பயன்படுத்தி சொத்தைக் கையகப்படுத்த முயன்றார். 1993-ஆம் ஆண்டில் 3-வது பிரதிவாதி தனது வழக்கறிஞருடன் சேர்ந்து ஒரு ஆவணத்தைத் தயாரித்து, சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து கையெழுத்திடுமாறு 1-ஆம் பிரதிவாதியை நிர்ப்பந்தித்தார். அந்த ஆவணத்தைப் பற்றி

கேட்டபோது, அது தொழில் கடன்களுக்காக எழுதப்பட்ட அடமானப் பத்திரங்களைத் தவிர வேறொன்றும் இல்லை என்று கூறப்பட்டது.

ஆனால், அந்த ஆவணங்கள் சொத்தைக் கையகப்படுத்தும் நோக்கத்துடன் சூழ்ச்சியாகத் தயாரிக்கப்பட்ட கிரையப் பத்திரங்கள் (Sale Deeds) என்பது தெரியவந்தது. தெரிந்த மனிதர்களின் உதவியுடன், 1995-ஆம் ஆண்டில் அந்தப் பத்திரங்களை 1-ஆம் பிரதிவாதி ரத்து செய்தார்.

3-ஆம் பிரதிவாதி பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 1-ஆம் பிரதிவாதிக்கு எதிராக ஒரு வழக்கைத் தாக்கல் செய்து, ஒருதலைப்பட்சத் தீர்ப்பை (Exparte decree) பெற்றார். 2008-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நிலங்களை விற்க முயற்சித்தபோது மேற்படி விவரம் தெரியவந்தது. மேலும், அன்றைய பழனி காவல் ஆய்வாளரின் உதவியுடன் 3-வது பிரதிவாதி ஒரு குற்றவியல் (Criminal) வழக்கையும் தாக்கல் செய்தார்.

மேற்படி பழனி உரிமையியல் நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்சத் தீர்ப்பைத் தள்ளுபடி செய்யக் கோரி, பழனி மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 1-ஆம் பிரதிவாதியால் மனு தாக்கல் செய்யப்பட்டு, அது நிலுவையில் உள்ளது. 3-ஆம் பிரதிவாதியின் பேரில் இருந்த நம்பிக்கையின் காரணமாக அவர் கொடுத்த அறிவுறுத்தல்களின்படியே 1-ஆம் பிரதிவாதி செயல்பட்டார். ஆனால், 1-ஆம் பிரதிவாதியின் படிப்பறிவின்மையைப் பயன்படுத்தி, 3-ஆம் பிரதிவாதி நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டார். 3-ஆம் பிரதிவாதியின் செயலுக்கு 1-ஆம் பிரதிவாதி காரணம் அல்ல. ஆகவே, இந்த வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>4) 2-ஆம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம் :</u>**

2-ஆம் பிரதிவாதியால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளைத் தவிர, மற்ற அனைத்து சங்கதிகளும் பொய் என மறுக்கப்படுகின்றன. அவற்றை வாதிகள் கண்டிப்பான முறையில் நிரூபிக்க வேண்டும்.

வழக்குச் சொத்தானது, இப்பிரதிவாதியின் தந்தையாரான ரெங்கசாமி பிள்ளை என்பவரால், தனது சுய சம்பாத்தியத்தின் மூலம், தனது பெயரிலும், இப்பிரதிவாதியின் பெயரிலும் மற்றும் 1-வது பிரதிவாதியின் பெயரிலும் 1975-ஆம் ஆண்டில் வாங்கப்பட்டது. வழக்குச் சொத்தின் மொத்த பரப்பளவு 4 ஏக்கர் 23 சென்ட் ஆகும்.

வழக்குச் சொத்தில் கூட்டாக மூவரும் செங்கல் தயாரித்தல் மற்றும் விற்பனை செய்யும் தொழிலைச் செய்து வந்தார்கள். 1986-ஆம் ஆண்டில் அவர்களுக்குள் ஒரு பாகப்பிரிவினை நடைபெற்றது. அந்தப் பாகப்பிரிவினைப் பத்திரத்தின்படி இப்பிரதிவாதிக்கும்,, 1-வது பிரதிவாதிக்கும் தலா 1 ஏக்கர் ஒதுக்கப்பட்டது. மீதமுள்ள 2 ஏக்கர் 23 சென்ட் நிலத்தை இப்பிரதிவாதியின் தந்தையார் வைத்துக்கொண்டார். பாகப்பிரிவினை நடந்தபோதிலும், செங்கல் தொழிலைக் கூட்டாகவே தொடர்ந்து நடத்தி வந்தார்கள்.

1987-ஆம் ஆண்டில் இப்பிரதிவாதியின் தந்தையாருக்கும் இப்பிரதிவாதிக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டதால், கூட்டுப் குடும்பத்திலிருந்து இப்பிரதிவாதி விலகிவிட்டார். இப்பிரதிவாதியின் தந்தையார் ரெங்கசாமி பிள்ளை 10.12.1987 அன்று காலமானார். அவர் தனது சொத்துக்கள் தொடர்பாக 1-வது பிரதிவாதியின் குழந்தைகளுக்கு மட்டுமே சாதகமாக ஒரு உயில் எழுதியிருப்பதாக தெரியவந்தது. இப்பிரதிவாதி வசதியாக இருந்ததால், அந்த உயிலை அப்படியே பொருட்படுத்தாமல் விட்டுவிட்டார்.

தந்தையாரின் மறைவுக்குப் பிறகும், இப்பிரதிவாதியும், 1-வது பிரதிவாதியும் சேர்ந்து சேம்பர் செங்கல் தொழிலைத் தொடர்ந்து நடத்தி வந்தநிலையில், 1990-ஆம் ஆண்டில் 3-வது பிரதிவாதி செங்கல் சூலைத் தொழிலில் நுழைந்தார். 3-வது பிரதிவாதி, வேலுச்சாமி என்பவரின் பினாமி ஆவார். அந்த வேலுச்சாமி ஒரு பொதுப்பணித்துறை (PWD) ஒப்பந்ததாரர். அவர் தனது சொந்தப் பயன்பாட்டிற்காக இந்தச் செங்கல் சேம்பரைப் பயன்படுத்தத் தொடங்கினார். இப்பிரதிவாதியின்

சகோதரரான 1-வது பிரதிவாதி, 3-வது பிரதிவாதியின் கட்டுப்பாட்டில் அடிமை போல இருந்தார். மேலும், 3-வது பிரதிவாதியின் கணவரின் ஆதிக்கத்தால் தொழில் முறையாக நடைபெறவில்லை. எனவே, இப்பிரதிவாதிக்கு சொந்தமான நிலத்தின் பங்கைக் குறைந்த வாடகைக்கு 1-வது பிரதிவாதியிடம் விட்டுவிட்டு, தொழிலில் இருந்து 2-ஆம் பிரதிவாதி விலகிவிட்டார்.

1-ஆம் பிரதிவாதிக்கு எந்தவொரு அதிகாரப் பத்திரமும் 2-ஆம் பிரதிவாதி (Power Deed) எழுதித் தரவில்லை. இப்பிரதிவாதி மற்றும் 1-ஆம் பிரதிவாதியின் தந்தையாரும் 1-வது பிரதிவாதிக்குச் சாதகமாக எந்தவொரு செட்டில்மென்ட் பத்திரமும் எழுதித் தரவில்லை. நிலத்தின் வாடகை மற்றும் செங்கல் விற்பனை குறித்து ஏதேனும் தகராறு ஏற்படும் போதெல்லாம், 3-ஆம் பிரதிவாதி பழனியிலுள்ள அவரது வழக்கறிஞர் வீட்டிற்குப் பேச்சுவார்த்தைக்காக அழைப்பார்.

வணிக விஷயங்களில் இப்பிரதிவாதியும், 1-ஆம் பிரதிவாதியும் 3-வது பிரதிவாதியின் பேரில் இருந்த நம்பிக்கையினால் இருவரும் வணிக ஒப்பந்தத் தாள்களில் மட்டுமே கையெழுத்திட்டார்கள். ஆனால், யாருக்கும் எவ்வித அதிகாரப் பத்திரமும் (Power Deed) எழுதித் தரவில்லை. வழக்குச் சொத்தின் மீது 3-வது பிரதிவாதியின் கணவரின் ஆதிக்கம் செலுத்தினார்.

1-வது பிரதிவாதிக்கு எந்தவொரு அதிகாரப் பத்திரமும் எழுதித் தரவில்லை என்பதையும், அதன் அடிப்படையில் செய்யப்பட்ட சொத்து மாற்றங்கள் எதுவும் செல்லாது. 3-வது பிரதிவாதிக்கு சாதகமாகப் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்சத் தீர்ப்பை (Exparte decree) தள்ளுபடி செய்யக் கோரி, 1-ஆம் பிரதிவாதி பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து, அது நிலுவையில் உள்ளது என்பது பின்னர்தான் தெரிய வந்தது. எனவே, வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**05) 3-ஆம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம் :**

வழக்குச் சொத்தானது வாதிகளின் பாட்டனாரான K.ரெங்கசாமி பிள்ளை

என்பவரால் 1975-ஆம் ஆண்டில் தனிப்பட்ட முறையில் வாங்கப்பட்டது என்றும், கிரையப்பத்திரம் அவருக்கும் அவரது இரு மகன்களான தண்டபாணி மற்றும் குப்புராஜ் ஆகியோரின் பெயரிலும் எழுதப்பட்டிருந்தபோதிலும், அதற்கான கிரையத் தொகை முழுவதையும் வாதிகளின் பாட்டனாரே தனிப்பட்ட முறையில் வழங்கினார் என்றும் கூறுவது பொய்யாகும்.

உண்மையில், அந்தச் சொத்தானது ரெங்கசாமி பிள்ளை மற்றும் அவரது இரு மகன்களான தண்டபாணி மற்றும் குப்புராஜ் ஆகியோரின் கூட்டு முயற்சியின் வருமானத்திலிருந்தே வாங்கப்பட்டது. எனவே, அவர்கள் மூவருக்கும் வழக்குச் சொத்தில் தலா 1/3 பங்கு உரிமை உள்ளது.

ரெங்கசாமி பிள்ளை தனது 1/3 பங்கை, கடந்த 29.11.1980 நாளிட்ட பதிவு செய்யப்பட்ட செட்டில்மென்ட் பத்திரத்தின் மூலம், 1-ஆம் பிரதிவாதி தண்டபாணிக்கு எழுதி வைத்துவிட்டார். அதன் அடிப்படையில் தண்டபாணி தனது தந்தையின் பங்கை அடைந்துவிட்டார். அதற்குப் பிறகு ரெங்கசாமி பிள்ளைக்கு அந்தச் சொத்தில் எந்த உரிமையும் இல்லை. அவ்வாறான நிலையில், சொத்து குறித்து வாதிகளுக்குச் சாதகமாக அவரால் உயில் எழுதியிருக்க முடியாது.

2-வது பிரதிவாதியான குப்புராஜ், தனது 1/3 பங்கு தொடர்பாக, 1-ஆம் பிரதிவாதியான தண்டபாணிக்கு சாதகமாக கடந்த 11.12.1989 அன்று பதிவு செய்யப்பட்ட அதிகாரப் பத்திரத்தை (Power Deed) எழுதிக் கொடுத்துள்ளார். தனது தந்தையின் செட்டில்மென்ட் மற்றும் தனது சகோதரரான 2-வது பிரதிவாதி எழுதிக் கொடுத்த அதிகாரப் பத்திரத்தின் அடிப்படையில், 1-வது பிரதிவாதி வழக்குச் சொத்தை கடந்த 29.11.1993 நாளிட்ட இரண்டு பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரங்கள் மூலம் தகுந்த கிரையத் தொகைக்காக இந்த பிரதிவாதிக்கு விற்பனை செய்து, வழக்குச் சொத்தின் சுவாதீனத்தையும் இந்த பிரதிவாதியிடம் ஒப்படைத்துவிட்டார்.

அன்றிலிருந்து இந்த பிரதிவாதி சொந்தக்காரராக நிலத்தின் முழுப் பரப்பளவையும் அனுபவித்து வருகிறார். மேலும் நிலத்திற்கான தனிப்பட்ட பட்டாவையும் தனது பெயரில் பெற்று, சொத்திற்கான தீர்வையையும் (kist) செலுத்தி வருகிறார். இந்த பிரதிவாதி 2005-ஆம் ஆண்டு வரை சோளம் போன்ற புஞ்சைப் பயிர்களைப் பயிரிட்டு வந்தார்,

மேலும் 2005-ஆம் ஆண்டில் அவரே தனிப்பட்ட முறையில் தாவாச் சொத்தில் சேம்பர் பணிகளைத் தொடங்கி, இன்று வரை தொழிலை நடத்தி வருகிறார். எனவே, வழக்குரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை. வாதிகளின் தூண்டுதலின் பேரில், தண்டபாணி இந்த பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரையத்தை ரத்து செய்யும் பத்திரத்தை எழுதி, சொத்தை பறிக்க முயன்றதால் பழனி 1-வது சார் பதிவாளர் மற்றும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் ஆகியோருக்கு எதிராக O.S. No. 210/96 என்ற எண்ணில் விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை (Permanent Injunction) பரிகாரங்கள் கோரி வழக்கைத் தாக்கல் செய்தார். கடந்த 09.06.2003-ஆம் தேதி வழக்கில் இந்த பிரதிவாதிக்கு சாதகமாகத் தீர்ப்பளிக்கப்பட்டது.

மேற்படி தீர்ப்பில் தண்டபாணியால் இந்த பிரதிவாதிக்குச் சாதகமாக இருந்த கிரையப் பத்திரத்தை ரத்து செய்தது செல்லாது என்று உத்தரவிட்டுள்ளது. தண்டபாணியோ, குப்புராஜோ அல்லது வேறு யாரோ எந்தவொரு காலத்திலும் இந்த பிரதிவாதியுடன் கூட்டாகச் சேம்பர் தொழில் செய்யவில்லை. இது அவருடைய தனிப்பட்ட தொழிலாகும். மேலும், வழக்குச் சொத்து அவருடைய தனிப்பட்ட சுவாதீனத்திலும் அனுபவத்திலும் உள்ளது. எனவே, வாதிகளுக்கு வழக்குச் சொத்தின் மீது எந்த உரிமையும் கோர முடியாது. வாதிகளால் அனுப்பப்பட்ட அறிவிப்பிற்கு (Notice), இந்த பிரதிவாதி ஏற்கனவே, 15.09.2008 அன்று தகுந்த பதில் அறிவிப்பை (Reply Notice) அனுப்பியுள்ளார்.

வாதிகளுக்கு வழக்குச் சொத்தில் எந்த உரிமையும் இல்லாததால், பாகப்பிரிவினை, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்களைப் பெறத் தகுதியற்றவர்கள். ஆகையால், பொய்யான சங்கதிகளுடன் வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கினை தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும்.

**6) 4, 5, 6 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம் :**

வாதிகளின் வழக்கில் இப்பிரதிவாதிகளால் ஒத்துக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்றவை பொய்யானவை எனவும், அவற்றின் உண்மை தன்மையை நிரூபிக்கும் பொறுப்பு வாதிகளைச் சார்ந்தது.

வாதிகள் பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ள இந்த வழக்கினை பொறுத்தமட்டில் வழக்கு சொத்தானது, 1975-ம் வருடத்தில் 2-ம் பிரதிவாதியான குப்புராஜ் அவர்களின் தகப்பனாரும், மற்றும் 4,5,6 பிரதிவாதிகளின் அப்பாவை பெற்ற தாத்தாவுமான ரெங்கசாமிபிள்ளை என்பவர் பெயரில் கூட்டாக கிரையம் பெறப்பட்டது. இந்த கிரையத்தில் ரெங்கசாபிபிள்ளையுடன் சேர்ந்து 2ம் பிரதியாதியாகிய லேட்.குப்புராஜ் மற்றும் 1-ம் பிரதிவாதியாகிய லேட்.தண்டபாணி ஆகியோரின் உழைப்பில் கிடைத்த மூலதனத்தையும் சேர்த்தே ரெங்கசாமிபிள்ளை பெயரிலும், 1, 2 பிரதிவாதிகளின் பெயரிலும், தாவா சொத்தானது கிரைய ஆவணமாக எழுதப்பட்டது.

இந்த சொத்தினை கிரையம் பெற்ற தினத்திலிருந்து 4, 5, 6 பிரதிவாதிகள், லேட் ரெங்கசாமிபிள்ளை அவர்களுடன் சேர்ந்து இப்பிரதிவாதிகளின் தகப்பனாரான குப்புராஜ் மற்றும் 1-ம் பிரதிவாதியாகிய லேட்.தண்டபாணி ஆகிய அனைவரும் தங்களுடைய கூட்டு சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் வைத்தே அனுபவித்து வந்தனர்.

தாவா சொத்தில் ஆரம்பத்தில் ரெங்கசாமிபிள்ளை மற்றும் 1, 2 பிரதிவாதிகள் செங்கல்சூளை வைத்து வியாபாரம் செய்து வந்தனர். இந்நிலையில், 3-ம்பிரதிவாதி மாசிலாமணி தனது கணவர் வேலுச்சாமி மூலம் சூளைக்கு தேவையான

மூலப்பொருளான மண் சப்ளை செய்து வந்தார். காலபோக்கில் 2-ம்பிரதிவாதியின் அண்ணான 1-ம்பிரதிவாதி வேலுச்சாமியின் சொல் கேட்பவராக மாறி வேலுச்சாமியை பல இடத்தில் முன்னிலைப்படுத்தியதால், 2-ம் பிரதிவாதிக்கும், 1-ம் பிரதிவாதிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

சகோதரர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால், இதனை சுமுகமாக தீர்க்க 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனாரான ரெங்கசாமிபிள்ளையின் ஏற்பாட்டின்படி 29.6.1986-ம் தேதியன்று ஒரு பதிவில்லாத பாகவிஸ்தி ஆவணம் ஏற்படுத்தப்பட்டது. அதன்படி மொத்தமுள்ள 4 ஏக்கர் 23 செண்ட் நிலத்தில், 2 ஏக்கர் 23 செண்ட் நிலத்தை ரெங்கசாமிபிள்ளை தன் கைவசம் வைத்துக்கொண்டு 1, 2 பிரதிவாதிகளுக்கு தலா 1 ஏக்கர் வீதம் மொத்தம் 2 ஏக்கர் பகிர்ந்து கொடுத்தார்.

ஆனாலும், மொத்த சொத்தினையும், செங்கல் சூளையும் கூட்டாகவே வைத்து நடத்தி வந்தனர். இருப்பினும் 2-ம்பிரதிவாதி, 3-ம் பிரதிவாதியின் கணவர் வேலுச்சாமி என்பவரின் உத்தரவின்படி நடக்க ஆரம்பித்ததால் கருத்துவேறுபாடு கூடுதலாகி, 2-ம் பிரதிவாதி தனியே பிரிந்து வந்து விட்டார்.

தாவா சொத்தை பொறுத்தவரை 2ம் பிரதிவாதி எவ்வித வில்லங்க விவகாரங்களும் ஏற்படுத்தி கொடுக்கவில்லை. வில்லங்கங்கள் ஏற்பட்டிருந்தால் அது 1 மற்றும் 3 பிரதிவாதிகளால் உருவாக்கப்பட்டதாகும். அதற்கும் 2ம் பிரதிவாதிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. எனவே, வாதிகளின் வழக்கை இந்த பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**04) தாவா வழக்குரை மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரைகள் ஆகியவற்றை பரிசீலனை செய்தபின், இவ்வழக்கில் முடிவு காணவேண்டிய கீழ்க்கண்ட எழுவினாக்கள் ஏற்கனவே இந்நீதிமன்றத்தால் வனையப்பட்டுள்ளன.**

**(i) Whether the plaintiffs entitled for the 1/3 share as prayed for ?**

**(ii) To what other relief ?**

05) வாதிகள் தரப்பில் 1-ஆம் வாதி G.வைரமுத்து என்பவர் வா.சா.1 ஆகவும், முத்துலெட்சுமி என்பவர் வா.சா.2 ஆகவும், நவநீதிகிருஷ்ணன் என்பவர் வா.சா.3 ஆகவும், செல்வமுத்து வா.சா.ஆ.4 ஆகவும் இந்நீதிமன்றத்தில் வாய்மொழி சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ளனர். வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

06) தாவாவை எதிர்வழக்காடியுள்ள 3-ஆம் பிரதிவாதி தரப்பில், 3-ஆம் பிரதிவாதி மாசிலாமணியின் கணவரான வேலுச்சாமி என்பவர் பி.சா.1 ஆக இந்நீதிமன்றத்தில் வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளார். 3-ஆம் பிரதிவாதி தரப்பு எதிர்வாதத்திற்கு ஆதரவாக, இந்நீதிமன்றத்தில் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.17 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

07) இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தும் இந்நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் ஆஜராகியுள்ள கற்றறிந்த வழக்கறிஞரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எழுத்துமூலமான வாதுரை மற்றும் 3-ஆம் பிரதிவாதி தரப்பில் ஆஜராகியுள்ள கற்றறிந்த வழக்கறிஞரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள முன்தீர்ப்பு முடிவுகள் ஆகியவை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**08). எழுவினா 1-ற்கான தீர்வு:-**

வாதிகளின் தகப்பனார் 1-ஆம் பிரதிவாதி ஆவார். 1-ஆம் பிரதிவாதியின் உடன்பிறந்த சகோதரர் 2-ஆம் பிரதிவாதி ஆவார். 2-ஆம் பிரதிவாதியின் சட்டப்படியான வாரிசுகள் 4 முதல் 6 பிரதிவாதிகள் ஆவார்கள். வழக்கு விசாரணை இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும்போது, 1, 2 பிரதிவாதிகள் இருவரும் இறந்துள்ளனர்.

அசல் வழக்கில் ஆரம்பத்தில் தரப்பினர்களாக கட்சி சேர்க்கப்பட்டுள்ள 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில், தனித்தனியாக எதிர் வழக்குரைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு, 4 முதல் 6 பிரதிவாதிகள் வழக்கில் கட்சி சேர்க்கப்பட்ட பின், அவர்களால் தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கின் அனைத்து தரப்பினர்களாலும், தனித்தனியாக எதிர்வழக்குரைகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும், வழக்கானது 3-ஆம் பிரதிவாதியால் மட்டும் எதிர்வழக்காடப்பட்டுள்ளது. மற்ற தரப்பினர்கள் அனைவரும் வழக்கில் தோன்றாத் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த 1975-ஆம் ஆண்டு தாவாச் சொத்து 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனாரும், வாதிகளின் தகப்பனார் வழி பாட்டானாருமான ரெங்கசாமி பிள்ளை என்பவரால் கிரையம் பெறப்பட்டுள்ள தனிப்பட்ட சொத்து என வாதிகள் வழக்கில் கூறியுள்ளனர். மேற்படி கடந்த 21.09.1975-ஆம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வாதிகள் தரப்பில் இவ்வழக்கில் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

தாவா சொத்து தொடர்பான வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் வாதிகளின் பாட்டனார் ரெங்கசாமி மற்றும் மேற்படி ரெங்கசாமியின் மகன்களான 1, 2 பிரதிவாதிகள் ஆகியோர்களின் கூட்டுப் பெயர்களில் கிரையம் பெறப்பட்டுள்ளதாக ஆவணத்தில் குறிப்புகள் உள்ளது. வா.சா.ஆ.1 கிரையத்திற்கான முழு கிரையத் தொகையையும் வாதிகளின் பாட்டனார் ரெங்கசாமி மட்டும் செலுத்தியுள்ளதாகவும், 1, 2 பிரதிவாதிகளுக்கு மேற்படி காலகட்டத்தில் வருமானம் ஈட்டும் திறன் இல்லாத காரணத்தினால், 1, 2 பிரதிவாதிகளின் பெயரிலும் குடும்ப நன்மை கருதி, மேற்படி கிரையம் கூட்டாக பெறப்பட்டது என வாதிகள் தரப்பில் ஆஜராகியுள்ள கற்றறிந்த வழக்கறிஞர் இந்நீதிமன்றத்தில் வாதிட்டுள்ளார்.

தாவாவை எதிர்வழக்காடியுள்ள 3-ஆம் பிரதிவாதி தரப்பில் வா.சா.ஆ.1 ஆவணத்திற்கான கிரையத் தொகை 1, 2 பிரதிவாதிகள் மற்றும் அவர்களது தகப்பனார் ரெங்கசாமி ஆகியோரது கூட்டு உழைப்பினால் கிடைத்துள்ள வருமானத்தைக் கொண்டு, செலுத்தப்பட்டுள்ளதால், மேற்படி கிரையம் மேற்படி மூன்று நபர்கள் பெயரிலும் பெறப்பட்டுள்ளதாகவும், அதன்படி வா.சா.ஆ.1 கிரையச் சொத்தில் மேற்படி மூவருக்கும் தலா 1/3 பங்குரிமை உள்ளது என எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கானது கடந்த 2009-ஆம் ஆண்டு முதலில் திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு தாக்கல் செய்துள்ள காலகட்டத்தில் வழக்குரையில் 1-ஆம் பிரதிவாதியின் வயது 65 என்றும், 2-ஆம் பிரதிவாதியின் வயது 60 என்றும் வாதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

வழக்குரையில் வாதிகள் குறிப்பிட்டுள்ள 1, 2 பிரதிவாதிகளின் வயதினை கணக்கில் கொண்டு, வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் ஏற்பட்டுள்ள தேதியில் 1, 2 பிரதிவாதிகளின் வயதை கணக்கீடு செய்து பார்க்கும்போது, மேற்படி சமயத்தில் 1-ஆம் பிரதிவாதியின் வயது 34 என்பதையும், 2-ஆம் பிரதிவாதியின் வயது 29 என்பதையும் கண்டறிந்து கொள்ள முடிகிறது.

வா.சா.ஆ.1 ஆவண தேதியில் 34 வயது நிரம்பியுள்ள 1-ஆம் பிரதிவாதியும், 29 வயது நிரம்பியுள்ள 2-ஆம் பிரதிவாதியும் எந்த ஒரு வருமானம் ஈட்டும் திறனும் இல்லாமல் இருந்துள்ளனர் என வழக்கில் வாதிகளால் கூறியுள்ள சங்கதி நடைமுறையில் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும், நம்பக் கூடியதாகவும் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

வாதிகளின் வழக்குரையில், 4-ஆம் பத்தியில் தாவா சொத்தில் வாதிகளின் பாட்டனார் செங்கல் சூளைத் தொழில் நடத்தி வந்துள்ள நிலையில், மேற்படி தொழிலுக்கு 1, 2 பிரதிவாதிகள் இருவரும் உதவியாக இருந்து, வேலை

செய்துள்ளனர் என குறிப்பிட்டுள்ளார்கள். அதன்படி, வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்டுள்ள தேதியில், 1, 2 பிரதிவாதிகள் இருவரும் வருமானம் ஈட்டும் நிலையில் இருந்துள்ளனர் என்ற உண்மையை தெரிந்து கொள்ள முடிகிறது.

வா.சா.ஆ.1 ஆவணத்திற்கான கிரையத் தொகையை வாதிகளின் பாட்டனார் ரெங்கசாமி மற்றும் 1, 2 பிரதிவாதிகளிடமிருந்து மொத்தமாக கிரையம் கொடுத்துள்ள நபர் பெற்றுக் கொண்டுள்ளதாக வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில், வா.சா.ஆ.1 கிரைய ஆவணம், வாதிகளின் பாட்டனார் ரெங்கசாமி என்பவரின் தனிப்பட்ட வருமானத்தை மட்டும் கொண்டு, கிரையம் பெறப்பட்டுள்ள தனிப்பட்ட சொத்து என்ற வாதிகள் தரப்பு வழக்கினை இந்நீதிமன்றம் ஏற்றுக் கொள்ள மறுத்து அதனை நிராகரிப்பு செய்கிறது.

வா.சா.ஆ.1 கிரைய ஆவணத் தேதியில், 1, 2 பிரதிவாதிகளுக்கும் வருமானம் ஈட்டும் திறன் இருந்துள்ளது என இந்நீதிமன்றம் ஏற்கனவே முடிவு கண்டுள்ளதால், மேற்படி கிரையம் 1, 2 பிரதிவாதிகளின் கூட்டு வருமானத்தைக் கொண்டும், கிரையம் பெறப்பட்டுள்ளது எனவும், வா.சா.ஆ.1 கிரைய ஆவண சொத்தில் வாதிகளின் பாட்டனார் ரெங்கசாமி, 1, 2 பிரதிவாதிகள் ஆகியோருக்கு தலா 1/3 பங்குரிமை உள்ளது என்ற 3-ஆம் பிரதிவாதி தரப்பு எதிர்வாதத்தை சட்டப்படியாக இந்நீதிமன்றம் ஏற்றுக் கொள்கிறது.

வா.சா.ஆ.1 கிரைய ஆவண சொத்தில் வாதிகளின் பாட்டனார் ரெங்கசாமிக்கு 1/3 பங்குரிமை மட்டும் உள்ள நிலையில், மேற்படி பங்குரிமையை கடந்த 29.11.1980-ஆம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம், 1-ஆம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளதாக எதிர் வழக்காடியுள்ள 3-ஆம் பிரதிவாதி தரப்பில், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பி.வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம், வாதிகளின் பாட்டனார் ரெங்கசாமி 1-ஆம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளது உண்மை என வாதிகள் ஒப்புக் கொண்டுள்ளனர். கடந்த 29.09.1986-ஆம் தேதியிட்ட பதிவு செய்யப்படாத பஞ்சாயத்து பாகவிஸ்தி பத்திரம் மூலம், வா.சா.ஆ.1 கிரைய ஆவண சொத்துக்களை, வாதிகளின் பாட்டனார் ரெங்கசாமியும், 1, 2 பிரதிவாதிகளும் சேர்ந்து பாகம் செய்து கொண்டுள்ளதன் அடிப்படையில், வழக்குரையில் குறிப்பிட்டுள்ள தாவா சொத்து வாதிகளின் பாட்டனார் ரெங்கசாமி என்பவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என வழக்குரை சங்கதிகள் அமைந்துள்ளன.

மேற்படி பஞ்சாயத்து பாக விஸ்தி பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.2 ஆக வாதிகள் இவ்வழக்கில் குறியீடு செய்துள்ளனர். வா.சா.ஆ.1 கிரைய ஆவண சொத்தில், வாதிகளின் பாட்டனார் ரெங்கசாமிக்கு 1/3 பங்குரிமை மட்டும் உள்ளது என இந்நீதிமன்றம் ஏற்கனவே முடிவு கண்டுள்ளநிலையில், மேற்படி பங்குரிமையை அவர் பி.வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் 1-ஆம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளார்.

இந்நிலையில், பி.வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவண தேதிக்கு பின், வா.சா.ஆ.1 கிரைய ஆவண சொத்தில் வாதிகளின் பாட்டனார் ரெங்கசாமிக்கு சட்டப்படியான பங்கு உரிமை எதுவும் இல்லாதநிலையில், மேற்படி வா.சா.ஆ.2 பஞ்சாயத்து பாக விஸ்தி பத்திரம் ஏற்படுத்துவதற்கு அவருக்கு சட்டப்படியாக உரிமை எதுவும் இல்லை.

மேலும், வா.சா.ஆ.2 ஆவணம் சட்டப்படி பதிவு செய்யப்படாதநிலையில், அதனை வாதிகள் தரப்பு வழக்கு ஆதரவாக இந்நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளக் கூடாது என மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள கீழ்கண்ட முன் தீர்ப்புகளை 3-ஆம் பிரதிவாதி தரப்பில் ஆஜராகியுள்ள கற்றறிந்த வழக்கறிஞர் இந்நீதிமன்ற பார்வைக்கு சுட்டிக் காட்டியுள்ளார்.

2021 (5) CTC 859

2019 (6) CTC 517

2005 (1) MLJ 105

1998 (2) LW 678

மேற்படி முன்தீர்ப்புகள் அனைத்தும் 3-ஆம் பிரதிவாதி தரப்பு எதிர்வாதத்திற்கு ஆதரவாக அமைந்துள்ளதால், அவற்றை 3-ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இந்நீதிமன்றம் ஏற்றுக் கொள்கிறது. அதன்படி, வா.சா.ஆ.2 பதிவு செய்யப்படாத பஞ்சாயத்து பாகவிஸ்தி ஆவணத்தை வாதிகள் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இந்நீதிமன்றம் சட்டப்படியாக ஏற்றுக் கொள்ள மறுத்துள்ளது.

வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் தாவா சொத்தில் உரிமை பெற்றுள்ள வாதிகளின் பாட்டனார் ரெங்கசாமி, கடந்த 29.05.1987-ஆம் தேதியிட்ட பதிவு செய்யப்படாத உயில் ஆவணத்தின் மூலம், வாதிகள் பெயருக்கு தாவா சொத்தை உயில் எழுதிக் கொடுத்துள்ளதாக வழக்குரையில் கூறப்பட்டுள்ளது.

மேற்படி பதிவு செய்யப்படாத உயில் ஆவணத்தின் அசல் வா.சா.ஆ.3 ஆக இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதிகள் பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள வா.சா.ஆ.3 உயில் ஆவணத்திற்கான மூல ஆவணமாகிய வா.சா.ஆ.2 பஞ்சாயத்து பாக விஸ்தி பத்திரம் சட்டப்படியாக செல்லாத ஒன்று என ஏற்கனவே இந்நீதிமன்றம் முடிவு கண்டுள்ளது.

இச்சூழ்நிலையில், தாவா சொத்தில் சட்டப்படியாக பங்கு உரிமை எதுவும் இல்லாத வாதிகளின் பாட்டனார் ரெங்கசாமி என்பவர், தாவா சொத்து குறித்து வாதிகள் பெயருக்கு வா.சா.ஆ.3 உயில் ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுக்க சட்டப்படியாக முரண்தடை செய்யப்பட்டுள்ளார்.

வா.சா.ஆ.3 உயில் ஆவணம் உண்மையானது கிடையாது என 3-ஆம் பிரதிவாதி தரப்பில் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்திய

வாரிசுரிமை சட்டம் பிரிவு 63-ன்படியும், இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 68-ன்படியும் வா.சா.ஆ.3 உயில் ஆவணத்தின் உண்மைத் தன்மையை நிரூபிக்கும் சுமை வாதிகளைச் சார்ந்துள்ளது.

வா.சா.ஆ.3 உயில் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சாட்சிகள் மற்றும் மேற்படி ஆவணத்தை எழுதியதும், சாட்சியுமான நபர் ஆகியோர்கள் உயிருடன் உள்ளனரா? இல்லையா? என்பது குறித்துவாதிகள் வழக்கில் தெளிவுப்படுத்தவில்லை. மேற்படி சாட்சிகளை நீதிமன்ற சாட்சி அழைப்பாணை மூலமாக இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் விசாரணை செய்ய எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வா.சா.ஆ.3 உயில் ஆவணத்தில் 3-வதாக சாட்சி கையொப்பம் செய்துள்ள ஞானி என்பவரது மருமகன் செல்வமுத்து என்பவர் வா.சா.4 ஆக இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.4 செல்வமுத்து மேற்படி ஞானி என்பவரது நேரடியான சட்டப்படியான வாரிசாக இல்லாத நிலையில், அவரது வாய்மொழி சாட்சியம் எவ்வகையிலும் வாதிகள் வழக்கிற்கு ஏற்புடையதாக கணக்கில் எடுத்துக் கொள்ள முடியாது.

வா.சா.ஆ.3 உயில் ஆவணத்தை நீதிமன்றத்தில் நிரூபணம் செய்வது தொடர்பாக, மாண்பமை இந்திய உச்சநீதிமன்றம் மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட முன்தீர்ப்புகளை 3-ஆம் பிரதிவாதி தரப்பில் ஆஜராகியுள்ள கற்றறிந்த வழக்கறிஞர் இந்நீதிமன்றத்திற்கு சுட்டிக் காட்டியுள்ளார்.

2020 (4) CTC 321 (SC)

2022 (3) CTC 88

மேற்படி முன்தீர்ப்புகள் இரண்டையும் 3-ஆம் பிரதிவாதி தரப்பு எதிர்வாதத்திற்கு ஆதரவாக இந்நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது.

வா.சா.ஆ.1 கிரைய ஆவண சொத்தில், வாதிகளின் பாட்டனார் ரெங்கசாமி பி.வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம், தனது 1/3 பங்குரிமையை 1-ஆம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளார். இந்நிலையில், கடந்த 11.12.1989-ஆம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட பொது அதிகாரத்தின் மூலம் வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் உள்ள 1/3 பங்குரிமையை, 1-ஆம் பிரதிவாதி பெயருக்கு 2-ஆம் பிரதிவாதி பொது அதிகாரம் எழுதிக் கொடுத்துள்ளார் என 3-ஆம் பிரதிவாதி தரப்பில் எதிர்வாதம்முன்வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பொது அதிகார ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.2 ஆக 3-ஆம் பிரதிவாதியால் வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், 1-ஆம் பிரதிவாதி, வா.சா.ஆ.1 கிரைய ஆவண சொத்தில் ஒரு பகுதியை, கடந்த 29.11.1993-ஆம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் மூலமும், அதே தேதியிட்ட மற்றொரு கிரைய ஆவணத்தின் மூலம் வா.சா.ஆ.1 சொத்தின் மீதியுள்ள பகுதியையும் 3-ஆம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என 3-ஆம் பிரதிவாதி எதிர்வாதம் செய்துள்ளார்.

மேற்படி கிரைய ஆவணங்களின் அசல் பி.வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ.4 ஆக 3-ஆம் பிரதிவாதியால் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இரு ஆவணங்களின் மூலம், தாவா சொத்தில் 3-ஆம் பிரதிவாதி சட்டப்படியான உரிமையாளராகி உள்ளார் என்ற உண்மையை கண்டறிந்து கொள்ள முடிகிறது.

3-ஆம் பிரதிவாதி தரப்பில் இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.7 சாகுபடி அடங்கல் ஆவணம் மற்றும் பி.வா.சா.ஆ.8 சான்றிதழ் பி.வா.சா.ஆ.9 தொழில் வரி ரசீது ஆகியவற்றின் மூலம், தாவா சொத்தில் 3-ஆம் பிரதிவாதி தொடர் அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்பதை தெரிந்து கொள்ள முடிகிறது.

1-ஆம் பிரதிவாதியால், 3-ஆம் பிரதிவாதிக்கு பி.வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ.4 கிரைய ஆவணங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட பின், அவற்றை பின்னிட்டு 1-ஆம்

பிரதிவாதி ரத்து செய்துள்ளார். எனவே, மேற்படி ரத்து ஆவணத்தை சட்டப்படி செல்லாது என விளம்புகை செய்ய வேண்டியும், தாவா சொத்தில் 3-ஆம் பிரதிவாதியின் உரிமை மூலம் விளம்புகை செய்ய வேண்டியும், அ.வ.எண்.210/1996 என் வழக்கை பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 3-ஆம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி வழக்கின் தீர்ப்புரை சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.10 ஆகவும், தீர்ப்பாணை சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.11 ஆகவும் 3-ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் மூலமாக, மேற்படி வழக்கு 3-ஆம் பிரதிவாதிக்கு ஆதரவாக நீதிமன்ற தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிந்து கொள்ள முடிகிறது.

மேற்படி அ.வ.எண்.210/1996 வழக்கில், 1-ஆம் பிரதிவாதியாக, இவ்வழக்கின் 1-ஆம் பிரதிவாதி சேர்க்கப்பட்டுள்ளார். மேற்படி வழக்கில் 1-ஆம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைப்பட்ச தீர்ப்பினை ரத்து செய்வதற்காக காலவரையறைச் சட்டம் பிரிவு 5-ன் கீழ் 1-ஆம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இ.ம.எண்.601/2008 மனு தொடர்பான உத்தரவு சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.12 ஆகவும், உத்தரவாணை சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.13 ஆகவும் இவ்வழக்கில் 3-ஆம் பிரதிவாதியால் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ஆவணங்களின் மூலம், 1-ஆம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இ.ம.எண்.601/2008 மனு, கடந்த 26.04.2010-ஆம் தேதியில் நீதிமன்றத்தில் இருதரப்பு விசாரணைக்குபின், தள்ளுபடி செய்யப்பட்டு, உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்ற உண்மையை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

மேற்படி உத்தரவிற்கு எதிராக 1-ஆம் பிரதிவாதி தரப்பில் நாளது தேதிவரையில் எந்த ஒரு மேல்முறையீடும் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலையில், பி.வா.சா.ஆ.3, பி.வா.சா.ஆ.4 கிரைய ஆவணங்களின்

அடிப்படையிலும், பி.வா.சா.ஆ.10 ஆவணத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலும், தாவா சொத்திற்கு 3-ஆம் பிரதிவாதி சட்டப்படியான உரிமையாளர் ஆகியுள்ளார் என்ற 3-ஆம் பிரதிவாதி தரப்பு எதிர்வாதத்தை இந்நீதிமன்றம் ஏற்றுக் கொள்கிறது.

மேற்கண்டவாறு இந்நீதிமன்றத்தால் விவரிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில், தாவா சொத்து தொடர்பாக வாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ள வா.சா.ஆ.3 உயில் ஆவணம் சட்டப்படி செல்லாத ஒன்று என இந்நீதிமன்றம் முடிவு கண்டுள்ளதால், அதன் அடிப்படையில், தாவா சொத்தில் எந்த ஒரு பாகப்பிரிவினை பரிகாரமும், பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கில் முன்வைத்துள்ள நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமும் சட்டப்படியாக வாதிகளுக்கு கிடைக்க முடியாது என முடிவு செய்யப்பட்டு எழுவினா 1 இந்நீதிமன்றத்தால் விடை காணப்படுகிறது.

9) **<u>எழுவினா 2 ற்க்கான தீர்வு</u>** :

தாவாவில் வாதிகள் எந்த ஒரு பரிகாரமும் பெற முடியாது என்று மேற்கண்ட எழுவினாவில் ஏற்கனவே இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்பட்டுள்ள நிலையில், தாவாவில் வாதிகள் வேறு எந்த பரிகாரமும் பெற முடியாது என முடிவு செய்யப்பட்டு, எழுவினா 2 ற்கு இந்நீதிமன்றத்தால் விடையளிக்கப்படுகிறது.

10) **முடிவில்**, தாவா தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் நேரிடையாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026-ம் ஆண்டு ஜுலை மாதம் 30- ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

RAJA B Digitally signed by RAJA B Date: 2026.07.30 17:21:01 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**

**வாதிகள் தரப்பு சாட்சிகள்** :-

வா.சா.1 - G.வைரமுத்து

வா.சா.2 - முத்துலெட்சுமி

வா.சா.3 - நவநீதகிருஷ்ணன்

வா.சா.4 - செல்வமுத்து

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்** :-

| **வரிசை எண்** | **தேதி** | **ஆவணங்கள்** | **தன்மை** |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 21.09.1975 | கிரையப் பத்திரம் | சான்று நகல் |
| வா.சா.ஆ.2 | 29.09.1986 | பதிவு செய்யப்படாத பஞ்சாயத்து பாக விஸ்தி பத்திரம் | அசல் |
| வா.சா.ஆ.3 | 29.05.1987 | பதிவு செய்யப்படாத உயில் ஆவணம் | அசல் |
| வா.சா.ஆ.4 | 06.09.2008 | வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.5 | - | அஞ்சலக ரசீது | அசல் |
| வா.சா.ஆ.6 | - | அஞ்சலக ஒப்புதல் அட்டை | அசல் |
| வா.சா.ஆ.7 | - | அஞ்சலக ஒப்புதல் அட்டை | அசல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்** : -

பி.சா.1 - வேலுச்சாமி (3-ஆம் பிரதிவாதியின் கணவர்)

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்** :-

| **வரிசை எண்** | **தேதி** | **ஆவணங்கள்** | **தன்மை** |
|---|---|---|---|
| பி.சா.ஆ.1 | 29.11.1980 | தானசெட்டில்மெண்ட் பத்திரம் | கணிணி நகல் மற்றும் அசல் |

| | | | |
|---|---|---|---|
| பி.சா.ஆ.2 | 11.12.1989 | பொது அதிகார ஆவணம் | சான்று நகல் மற்றும் அசல் |
| பி.சா.ஆ.3 | 29.11.1993 | கிரைய ஆவணம் | கணிணி நகல் மற்றும் அசல் |
| பி.சா.ஆ.4 | 29.11.1993 | கிரைய ஆவணம் | கணிணி நகல் மற்றும் அசல் |
| பி.சா.ஆ.5 | 24.12.1993 | செல் ரசீது | சான்று நகல் |
| பி.சா.ஆ.6 | 24.12.1993 | செல் ரசீது | சான்று நகல் |
| பி.சா.ஆ.7 | - | அடங்கல் கணக்கு | சான்று நகல் |
| பி.சா.ஆ.8 | 28.06.2019 | சூளை நடத்த திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் வழங்கிய சான்று | அசல் |
| பி.சா.ஆ.9 | 07.11.2017 | தொழில் வரி ரசீது | சான்று நகல் |
| பி.சா.ஆ.10 | 09.06.2003 | அ.வ.எண்.210/1996- தீர்ப்புரை | சான்று நகல் |
| பி.சா.ஆ.11 | 09.06.2003 | அ.வ.எண்.210/1996- தீர்ப்பாணை | சான்று நகல் |
| பி.சா.ஆ.12 | 26.04.2010 | இ.ம.எண்.601/2008 இன் அ.வ.எண்.210/1996-ன் உத்தரவு | சான்று நகல் |
| பி.சா.ஆ.13 | 26.04.2010 | இ.ம.எண்.601/2008 இன் அ.வ.எண்.210/1996-ன் உத்தரவாணை | சான்று நகல் |
| பி.சா.ஆ.14 | 26.07.2022 | பழனி மாவட்ட பதிவாளர் அவர்களின் செயல்முறை ஆவணம் | சான்று நகல் |

| | | | |
|---|---|---|---|
| பி.சா.ஆ.15 | 19.08.2008 | கிரைய ஆவணம் | சான்று நகல் |
| பி.சா.ஆ.16 | - | அ.வ.எண்.101/2018-ன் வழக்குரை | சார்வு நகல் |
| பி.சா.ஆ.17 | - | அ.வ.எண்.101/2018-ன் 3-ஆம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரை | அலுவலக நகல் |

RAJA B Digitally signed by RAJA B Date: 2026.07.30 17:21:15 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**